வைத்தியம் செய்துவிட்டு, பிறகு கொஞ்சம் சரியான வகையிலே நிலைமைகள் ஏற்பட்டதற்கு பிறகு, அந்த இடத்திலேயிருந்து காச நோய் மருத்துவ மனைக்கு டிரான்ஸ்ஃபர் செய்து, அந்த இடத்திலே அவர்களுக்கு வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை, அந்த அளவு நல்ல வகையிலே தான் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படுக்கைகளை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அவைகளையெல்லாம் அவசியமாகக் கவனிப்போம்.

(முற்பகல் 10—20)

தேனித் தொகுதியில் நகரப் பேருந்து வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள்.

*வினா எண். 430 : திரு. வே இரா. ஜெயராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனி—ஒண்டப்பட்டி, தேனி—கோவிந்தநகரம், கம்பம்—எரசக்கநாயக்கனூர், கம்பம்—புலிகுத்தி ஆகிய வழித்தடங்களில் கூடுதல் நகரப் பேருந்து வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தேனி—கோவிந்தநகரம் வழித்தடத்தில் மட்டும் இரண்டு கூடுதல் பேருந்துகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதர மூன்று வழித்தடங்களிலும் தற்போது உள்ள போக்குவரத்து வசதியே போதுமானதாக உள்ளது.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருவாடானைத் தொகுதியில் மினி பேருந்துப்பணி:

* வினா எண். 431 : திரு ச. அங்குசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவாடானைத் தொகுதியில் மினி பேருந்து விடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1981 மார்ச் 7

[முற்பகல் 10-20]

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகுபேரவைத்தலைவர் அவர்களே, திருவாடானைத் தொகுதியைப்பொறுத்தவரையில் அது அதிகமாக கிராமங்கள் உள்ள இடமாகும். அங்கே சரியான போக்குவரத்து வசதியில்லாமல் மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. மேலும் அந்த திருவாடானையில் ஒரே ஒரு மினி பஸ்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தத்தொகுதியிலே இன்னும் சில இடங்களில் அந்தப்பேருந்தை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் சட்டமன்ற உறுப்பினர் இருக்கின்ற நிலையை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். எனவே தேவை என்ற காரணத்தால் மீண்டும் தேவையானால் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: திருவாடானையில் இருந்து ஆர். எஸ். மங்கலம் அருகில்தான் உள்ளது. அது திருவாடானைப்பகுதியில் உள்ளது. அது என்னுடைய தொகுதி. திருவாடானையில் இருந்து ஆர். எஸ் மங்கலத்திற்கு மினி பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி அவருடைய தொகுதியிலே வந்திருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். நிச்சயமாக அதை ஆராய்ச்சி செய்து அவருடைய தொகுதி என்பதால் மட்டுமல்ல, தகுதியின் அடிப்படையிலேயும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மினி பேருந்து விடவேண்டும் என்று சில குறிப்புகளைக் கொடுத்திருக்கின்றேன். அப்படிக் கொடுக்கப்பட்ட இடங்களுக்கு மினி பேருந்துகள் விட அமைச்சர் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மினி பஸ்கள் விடுவதற்கான குறிப்புக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே மினி பேருந்துகள்தான் விடவேண்டுமா அல்லது பெரிய பேருந்து விடலாமா என்று ஆராய்ச்சி செய்துக் கொண்டிருக்கிறோம். பெரிய பேருந்து விடுவதற்கு வழி இருக்குமானால் நிச்சயமாக பெரிய பேருந்துகளே விடப்படும்.

திரு. உ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, திருவாடானை மட்டுமல்ல, முகவை மாவட்டம் அனைத்திலுமே ரஸ்தாக்கள் சரியாக இல்லாத காரணத்தினால், கிராம மக்களுக்குப் போக்குவரத்து வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு; ரஸ்தாக்கள்

1981 மார்ச் 7]

வசதி அற்ற நிலையிலே, மினி பஸ்கள் விடும் திட்டம் அரசின்பால் உள்ளது. அந்த அடிப்படையில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் மினி பஸ்களை விட உடனடியாக ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கமே பேருந்து வசதிகள் இல்லாத கிராமங்களுக்குப்பேருந்து வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான். அதன் அடிப்படையிலேதான் ஒவ்வொரு கிராமத்திற்கும் சாலைகள் போட்ட பின்னர் பெரிய பேருந்துகள் விடுவதற்குக் காலதாமதம் ஏற்படும் என்ற அடிப்படையில் மினி பேருந்து விடப்படவேண்டும் என்று நடவடிக்கை எடுத்தோம். நான் ஏற்கெனவே பல முறை சொல்லி இருக்கிறேன். திருப்பித் திருப்பிச் சொல்லுவதற்கு எனக்குச் சங்கடமாக இருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமைகள் கொஞ்சம் மோசமாக இருக்கின்றன என்பதால் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள்* முடிவுற்றன.

(குறிப்பு).—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கூட அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

இவை என் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்த பிறகு இவற்றைப் பேரவையில் எடுத்துக் கொள்வதா இல்லையா என்பதற்கான எனது இசைவு குறித்து முடிவு செய்யப்படும்.

---

*ஆ. உடுக்குறியிடாத வினாக்களும்' விடைகளும்—626—670 இணைப்பில் பார்க்க.